செ.வெ.எண்: நாள்:24.07.2021

**நாமக்கல் மாவட்டம்**

**கொல்லிமலை வட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, பழங்குடியினர் நலத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, மகளிர் திட்டத்துறை உள்ளிட்ட துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

------

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் இன்று (24.07.2021) ஆய்வு மேற்கொண்டார்.

முதலாவதாக, கொல்லிமலை வட்டம், சோளக்காடு பயணியர் மாளிகையில், கொல்லிமலை பகுதிகளில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, பழங்குடியினர் நலத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, மகளிர் திட்டத்துறை உள்ளிட்ட துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு திட்டப்பணிகள், குறித்த துறைவாரியாக அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து, கொல்லிமலை வட்டம், சோளக்காடு ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், அன்னாசி பழங்கள் விற்பனை முறை குறித்து வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்.

பின்னர், கொல்லிமலை வட்டம், செங்கரை, அரசு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப்பள்ளியில் 12 ஆம் வகுப்பு பயிலும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுடன் இணைய வழி வகுப்பு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலந்துரையாடினார்.

அதனைத்தொடர்ந்து, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், எடப்புளி நாடு ஊராட்சி, செங்கரை பகுதியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்பட்டு வரும், காளி அம்மன் மகளிர் சுய உதவி குழுவினரிடம் காகித பை உற்பத்தி முறை குறித்து கேட்டறிந்து, எடப்புளிநாடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் வழியாக வேளாண் பொறியியல் துறை மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து ரூ.10.00 இலட்சம் மானியத்துடன் இயந்திர வாடகை மையம் அமைத்து, செயல்படுத்தி வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

செம்மேடு அரசு தோட்டக்கலை பண்ணையில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் மிளகு சாகுபடி செய்யும் விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலந்துரையாடினார். அரசு தோட்டக்கலை பண்ணையில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் கொல்லிமலையில் விளைவிக்கப்பட்ட பலா பழம், அன்னாசி பழம், செவ்வாழை பழம் உள்ளிட்ட பழ வகைகள் மற்றும் வாசன பொருட்களான கிராம்பு, இலவங்கம், பிரியாணி இலை, ஜாதிக்காய் உள்ளிட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை பார்வையிட்டார்.

பின்னர், கொல்லிமலை வட்டம், வாழவந்தி நாடு அரசு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மருத்துவர்களிடம் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட இயக்க மேலான்மை அலகு மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.மா.பிரியா, மாவட்ட பழங்குடியினர் நலத்துறை அலுவலர் திரு.பா.இராமசாமி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.கணேசன், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் திரு.கார்த்திக், தோட்டக்கலைத்துறை அலுவலர் திரு.கேசவன், வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) திருமதி.இரா.கலைச்செல்வி, கொல்லிமலை வருவாய் வட்டாட்சியர் திரு.கண்ணன், கொல்லிமலை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.நடராஜன், திரு.ரவிச்சந்திரன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,நாமக்கல் மாவட்டம்